

சிவகங்கை மாவட்ட தலைமை பொதுக்குழு உறுப்பினர் திருமதி ஆதி.கண்ணாத்தாள் தனது மகன் ஆதி.ராமசாமி – யசுவேதா ஆகியோருக்கு வருகின்ற 6.9.2024 அன்று காரைக்குடியில் நடைபெற உள்ள திருமண அழைப்பிதழை கழக துணை பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற குழு தலைவருமான கனிமொழி எம்.பி.யிடம் வழங்கினார். உடன் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், தங்கம்தென்னரசு, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

### புதுக்கோட்டை மாவட்டம் துரையரசபுரம் கிராமத்தில்

# “மக்களுடன் முதல்வர்” திட்ட சிறப்பு முகாம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மனுக்களைப் பெற்று குறைகளைக் கேட்டறிந்தார்!

புதுக்கோட்டை ஆக.10-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், துரையரசபுரம் கிராமத்தில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாமில், சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் (06.08.2024) அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார்.

பின்னர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் நல்வாழ்வு வாழ்ந்திடும் வகையில் எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பதிவு செய்திடும் வகையில், “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தை ஊரகப் பகுதி களுக்கும் விரிவுப்படுத்திடும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 11.07.2024 முதல் 10.09.2024 வரை 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 495 கிராம ஊராட்சிகளில் 66 “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், துரையரசபுரம் கிராமத்தில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம் பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்கள் கேட்டறியப்பட்டது. மேலும் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், கணக்கன்காடு கிராமத்தில் “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாம் 08.08.2024 அன்று நடைபெற உள்ளது.

எனவே பொதுமக்களின் கோரிக்கை மனுக்களின் மீது உரிய பரிசீலனை செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ள, அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் எனவும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார். பின்னர், சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர், அறந்தாங்கி வட்டம், அழியாநிலை வருவாய் கிராமத்தில், புல எண் 49/1 பரப்பு 1.00.0 ஹெக்டேர் பரப்பில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசித்துவரும் 100 குடும்ப ங்களுக்கு தமிழக அரசு சார்பில் புதிய வீடுகள் கட்டுவதற்கான இடத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வுகளில், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், அறந்தாங்கி வட்டாட்சியர் திருநாவுக்கரசு, அறந்தாங்கி வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவடிவு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாடு சாலைத் திட்டங்களுக்கு உரிய நிதி வழங்கப்படும்!

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்விக்கு - ஒன்றிய அமைச்சர் நிதின்கட்கரி உறுதி



நாமக்கல், ஆக.10-

டெல்லி பாராளுமன்றத்தில் மாநிலங்களவை கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு

இன்றைய பாராளுமன்ற கூட்டத் தொடரில் மாநிலங்களவையில் கேள்வி நேரத்தில் 2023 மற்றும் 2024 ஆண்டுக்கான திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதியானது ரூ. 657.53 கோடி இது தமிழ்நாட்டுக்கு போதுமான நிதி இல்லை.

எனவே, தமிழ்நாட்டிற்கு அனுமதிக்கப்பட்ட தொகையாக சுமார் ரூ.2000 கோடியை நடப்பு நிதி ஆண்டில் எந்த குறையும், காலதாமதமும் இல்லாமல் ஒன்றிய அரசு இந்த நிதியாண்டிற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என வலியுறுத்தி தி.மு.க. எம்.பி கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் பேசினார்.

இதைத்தொடர்ந்து பேசிய ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி தமிழக நெடுஞ்சாலைத் துறைக்கு நிதி வழங்குவதில் நாங்கள் எந்தவித வரையறையும் வைத்திருக்கவில்லை.

இரண்டாயிரம் கோடி அல்ல, ரூ. 5000 கோடியை கூட ஒதுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஏற்கனவே இதுகுறித்து நாங்கள் பல்வேறு முடிவுகளையும் மேற்கொண்டு உள்ளோம். இருப்பினும் இதுதொடர்பாக நீங்கள் அதற்கான பரிந்துரையையும் , நிலம் கையகப்படுத்துதலையும் உறுதி செய்ய வேண்டும். இதையடுத்து அதுதொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசும் மேற்கொள்ளும் என்று தெரிவித்தார்.

### ஏ.ஆர்.ராஜா ஏற்பாட்டில்! குத்தாலம் மேற்கு ஒன்றியத்தில்

# அ.தி.மு.க., பா.ம.க., நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த 143 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. முன்னிலையில்! எஸ்.செல்வமணி, எம்.அப்துல்மாலிக், பஞ்சுகுமார் பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஆக.10-

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் மேற்கு ஒன்றியத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.ராஜா ஏற்பாட்டில் அ.தி.மு.க., பா.ம.க., நாம் தமிழர் உள்ளிட்ட மாற்று கட்சியினர் அக் கட்சிகளில் இருந்து விலகி தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி கோமலில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு குத்தாலம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.ராஜா தலைமை தாங்கினார்.

ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் கோமல், கொழையூர், கொக்கூர், மாந்தை, எழுமகளூர், கோபராஜபுரம் ஆகிய ஊராட்சிகளில் இருந்து அ.தி.மு.க., பா.ம.க., நாம் தமிழர் கட்சிகளை சேர்ந்த 143 பேர் பா.ம.க. வை சேர்ந்த ஒன்றிய குழு உறுப்பினர் டாக்டர் சிவக்குமார், பா.ம.க. மாவட்ட துணைத் தலைவர் கே.எஸ்.குமார், பா.ம.க. மாவட்ட முன்னாள் தலைவரும், மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.பட்டாபிராமன், அம்மா பேரவை செயலாளர் எஸ்.ஆர். காமராஜ், ஆகியோர் தலைமையில் அக் கட்சிகளில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கழகத்தில் இணைந்தவர்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., இரு வண்ண கைத்தறி ஆடை அணிவித்து கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் எஸ். செல்வமணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம். அப்துல்மாலிக், பஞ்சு. குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் வின்சென்ட் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம் மேற்கு ஒன்றியம் தெற்கு கள்ளிகுளத்தில் கலைஞர் அவர்களின் 6 வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி தலைமையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு முன்னிலையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது.உடன் மாடசாமி, ஆதிபாண்டி,ஐயப்பன், சண்முகசுந்தரம்,சார்லஸ், பெஸ்கி,பாபு,டெர்மின்,நிமலேஷ், மனோஜ்,மார்க்லின்ஸ்,செல்வம் பிரின்ஸ் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.



மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம் பொதும்பு கிராமத்தில் “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாமை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பொதுமக்கள் கொடுத்த மனுக்களுக்கு உடனடி தீர்வு கண்டு அதற்கான ஆணைகளை வழங்கிய போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மேற்கு ஒன்றிய சேர்மன் வீரராகவன், ஒன்றிய செயலாளர்கள் பொதும்பு தனசேகர், சிறைச்செல்வன் ஆகியோர் உள்ளனர்,

### மயிலாடுதுறை மாவட்டம் - கொள்ளிடம் ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ள உபரி நீர்

# நாதல்படுகை கிராமத்தை சூழ்ந்ததை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் ஆய்வு செய்தார்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ.. பங்கேற்பு!

மயிலாடுதுறை, ஆக. 10-

கர்நாடக நீர் பிடிப்பு பகுதியில் பெய்து வரும் கனமழையால் கர்நாடக அணையில் இருந்து உபரிநீர் பெரும் அளவில் திறந்து விடப்படுகிறது இந்த உபரி நீர் மேட்டூர் அணையை வந்து சேர்ந்தது எடுத்து மேட்டூர் அணையிலிருந்து கர்நாடக அணைகளில் இருந்து வரும் தண்ணீர் முழுவதும் அப்படியே வெளியேற்றப்படுகிறது இந்த உபரி நீர் காவிரி ஆற்றில் இருந்து கொள்ளிடம் ஆற்று வழியாக மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் ஒன்றிய பகுதியில் கடலில் கலக்கிறது. கொள்ளிடம் ஆற்றில் சுமார் 1,64,000 கன அடி நீர் வருவதால் கொள்ளிட கரையோர கிராமத்தில் நீர் உள்புகுந்ததால் அந்த பகுதி மக்கள் பாதிப்படைந்துள்ளனர். இதையடுத்து இதை எடுத்து அந்த பகுதியை கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம் நாதல்படுகை கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ள உபரிநீர் குடியிருப்பு பகுதிகளில் சூழ்ந்துள்ளதை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மேட்டூரில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள உபரி நீரானது மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் பகுதியில் 1 லட்சத்து 64 ஆயிரம் கன அடி கடந்து செல்கின்ற இடத்தில் நேரடியாக மாவட்ட ஆட்சித்தலைவர் பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் மற்றும் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம் மற்றும் மாவட்டத்தில் இருக்கக்கூடிய அனைத்துத்துறை அதிகாரிகளும் நேரடியாக ஆய்வுகளை மேற்கொண்டுள்ளோம். அந்த அடிப்படையில் இந்த பகுதியில் ஆற்றின் கரையோர பகுதியில் இருக்கின்ற முதலைமேடுதிட்டு, நாதல்படுகை, வெள்ளமணல், ஆச்சாள்புரம், திருமயிலாடி போன்ற பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இங்கு இருக்கின்ற 1400 குடும்பங்களில் உள்ள 5400 பேர் ஏழு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 3.8.2024 காலை முதல் அவர்களுக்கு 3 வேளையும் உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றது. அதேபோல, இந்த பகுதிகளில் பாதிக்கப்பட்ட விவசாய பகுதிகளையும்;, விவசாய பாதிப்புகளையும் வேளாண்மை துறை மூலம் அதற்கான ஆய்வு பணிகள் மேற்கொள்ள உள்ளனர். மேலும், இரண்டு வீடுகள் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கான உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி, மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கே.மீனா, மாவட்ட வருவாய் அலுவலர் த.மு.மணிமேகலை, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் உ.அர்ச்சனா,கொள்ளிடம் ஒன்றிய கழக செயலாளர் கொள்ளிடம் மேற்கு செல்ல சேதுரவிக்குமார், கொள்ளிடம் கிழக்கு மலர்விழி திருமாவளவன், பொதுக்குழு உறுப்பினர் கென்னடி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் விஜய பாரதி, கொள்ளிடம் ஒன்றிய குழு தலைவர் ஜெயபிரகாஷ், வட்டாட்சியர் இளங்கோவன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் த.தியாகராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.

### கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி

# நீலமங்கலம் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்!

## வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ.பங்கேற்பு

கள்ளக்குறிச்சி, ஆக.10-

கள்ளக்குறிச்சி சட்ட மன்ற தொகுதி நீலமங்கலம் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்றது,

முகாமிற்கு மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமை தாங்கினார், தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலை வகித்தார், ஊராட்சி மன்ற தலைவர் ஜெய்சங்கர் வரவேற்றார்.

முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது உரிய

நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் உறுப்பினர் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் அறிவுறுத்தினார், இதன் பின்னர் அவர் பேசுகையில் நமது திராவிட மாடல் அரசு எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழக முதல்வர், கழகத் தலைவர், சமூக நீதி காவலர்,திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 24 மணி நேரமும் அயராது உழைத்துக் கொண்டு இருக்கிறார், அடி தட்டு மக்களுக்கும் அனைத்து நலத்திட்ட உதவிகள் மற்றும் அரசு வழங்குகின்ற திட்டங்கள் கிடைக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையில் மக்களுடன் முதல்வர் திட்டம் உங்கள் ஊருக்கே வந்து அமைச்சர்கள்,சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியர், அரசு அதிகாரிகள்,பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள்,உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்பட அனைவரும் உங்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று அந்த கோரிக்கை மனுக்களின் மீது ஆராய்ந்து அதற்கு தீர்வு காண வழிவகை செய்யப்பட்டுள்ளது, ஆகவே இது மக்களுக்கான அரசு என்பதில் ஒரு துளி கூட சந்தேகம் இல்லை,அந்த அளவுக்கு சிறப்பான ஆட்சி தமிழகத்தில் நடைபெற்று வருகிறது,மேலும் அரசு அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் மனுக்களை கொடுப்பதற்கு முன் கம்ப்யூட்டரில் செல்போன் எண்ணுடன் பதிவு செய்ய வேண்டும்,அவ்வாறு செய்தால் தான் கோரிக்கை மனுக்களின் நிலை குறித்து உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம், நலத்திட்ட உதவிகள் வழங்கவும் ஏதுவாக இருக்கும் என்றார்.

முகாமில் கோட்டாட்சியர் லூர்துசாமி,மாவட்ட ஊராட்சி குழு தலைவர் புவனேஷ்வரி பெருமாள்,

வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் பூமா, செல்வகணேஷ், வருவாய் வட்டாட்சியர் கமலக்கண்ணன், ஒன்றிய கழக செயலாளர் வெங்கடாசலம், தெற்கு மாவட்ட அவைத்தலைவர் ராமமூர்த்தி, ஒன்றியக்குழு உறுப்பினர் ராதிகா சக்கரபாணி, ஊராட்சி மன்ற துணை தலைவர் அசோகன். ஊராட்சி செயலாளர் முத்தையன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தலைவர் கலைஞரின் 6வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு காரைக்குடி நகர் கழகம் சார்பில் முதியோர் இல்லத்தில் மதிய உணவினை காரைக்குடி நகர் கழக செயலாளர் என்.குணசேகரன் தலைமையில் காரைக்குடி நகர்மன்ற தலைவர் எஸ்.முத்துதுரை முன்னிலையில் உணவு வழங்கப்பட்டது. இதில் காரைக்குடி நகர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.